www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 9

தேர்வு எண்

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023-24

நேரம் : 3.00 மணி]

## தமிழ்

[மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி – I (மதிப்பெண்கள்:15)

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 15X1=15

1. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தாமணி – அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு –
   (அ) வேற்றுமைத் தொகை (ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்
   (இ) பண்புத்தொகை (ஈ) வினைத்தொகை
2. நீர்நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
   (அ) அகழி (ஆ) ஆறு (இ) இலஞ்சி (ஈ) புலரி
3. தீரா இடும்பை தருவது எது?
   (அ) ஆராயாமை, ஐயப்படுதல் (ஆ) குணம், குற்றம்
   (இ) பெருமை, சிறுமை (ஈ) நாடாமை, பேணாமை
4. கைப்பொருளைக் கடல் --------யில் தொலைத்து விட்டு, கரையில் தேடி ------ ந்தால் கிடைக்குமா? இத்தொடரின் விடுபட்ட இரு இடங்களையும் நிரப்பக்கூடிய ஒரு சொல்லைத் தேர்க.
   (அ) விலங்கு (ஆ) அகல் (இ) கால் (ஈ) அலை
5. ஐம்பெருங்குழு, எண்பேராயம் – சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
   (அ) திசைச்சொற்கள் (ஆ) வடசொற்கள் (இ) உரிச்சொற்கள் (ஈ) தொகைச்சொற்கள்
6. நேற்று தென்றல் காற்று --------.
   விடுப்பட்ட இடத்தைச் சரியான மரபுச்சொல்லால் நிரப்புக.
   (அ) அடித்தது (ஆ) வீசியது (இ) பறந்தது (ஈ) வீழ்ந்தது
7. 'பொதுவர்கள் பொலிஉறப் போர்அடித்திடும்' நிலப்பகுதி --------
   (அ) குறிஞ்சி (ஆ) திரிதல் (இ) முல்லை (ஈ) பாலை
8. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
   (அ) தேசியத் திறனறித் தேர்வு (ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
   (இ) தேசியத் திறனறி, கல்வி உதவித் தொகைத் தேர்வு (ஈ) மூன்றும் சரி
9. பூவாது காய்க்கும். மலர்க்கை – அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?
   (அ) பெயரெச்சம், உவமைத்தொகை (ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
   (இ) வினையெச்சம், உவமை (ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை
10. 'நகமும் சதையும்' என்ற மரபுத்தொடருக்கான சரியான பொருளைத் தேர்க.
    (அ) இணைந்தே இருத்தல் (ஆ) சுத்தமாக இருத்தல்
    (இ) விலகி இருத்தல் (ஈ) வேறுபட்டு இருத்தல்
11. இந்திய தேசிய இராணுவத்தை --------- இன் தலைமையில் --------- உருவாக்கினர்.
    (அ) சுபாஷ் சந்திரபோஸ், இந்தியர் (ஆ) சுபாஷ் சந்திரபோஸ், ஜப்பானியர்
    (இ) மோகன்சிங், ஜப்பானியர் (ஈ) மோகன் சிங், இந்தியர்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். (12,13,14,15)

*"முதிரையும் சாமையும் வரகும் மொய்மணிக்*
*குதிரைவா லியும்களம் குவித்துக் குன்றுஎனப்*
*பொதுவர்கள் பொலிஉறப் போர்அ டித்திடும்*
*அதிர்குரல் கேட்டுஉழை அஞ்சி ஓடுமே!"*



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

12. இச்செய்யுள் அடியில் இடம்பெற்றுள்ள பொலி என்ற சொல் பொருள்
(அ) தானியக்குவியல் (ஆ) ஒரு வகை மான் (இ) காடு (ஈ) நாகணவாய்ப்பறவை
13. 'அதிர்குரல்' என்பதன் இலக்கணக் குறிப்பு
(அ) உவமைத்தொகை (ஆ) வேற்றுமைத்தொகை (இ) வினைத்தொகை (ஈ) பண்புத்தொகை
14. இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்களைத் தேர்க.
(அ) முதிரையும், சாமையும் (ஆ) முதிரையும், குதிரைவாலியும்
(இ) வரகும், குவித்து (ஈ) பொலிஉற, கேட்டுஉழை
15. இச்செய்யுள் அடிகள் இடம்பெற்றுள்ள நூல் –
(அ) இராவணகாவியம் (ஆ) நாச்சியார் திருமொழி (இ) குடும்ப விளக்கு (ஈ) மணிமேகலை

## பகுதி – II (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**வினா எண் 21–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 4X2=8

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் எழுதுக.
அ) சங்க இலக்கியமான கலித்தொகையில் ஏறுதழுவுதல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
ஆ) இந்திய தேசிய இராணுவத்தில் ஜான்சிராணி பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது.
17. பழமணல் மாற்றுமின்; புதுமணல் பரப்புமின் – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
18. 'கூவல்' என்று அழைக்கப்படுவது எது?
19. தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். – இக்குறட்பாவின் கருத்தை எழுதுக.
20. இந்திய தேசிய இராணுவத்தில் குறிப்பிடத் தகுந்த தமிழக வீரர்கள் யாவர்?
21. 'அன்புநாண்' எனத்தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5X2=10

22. வீணையோடு வந்தாள், கிளியே பேசு – தொடரின் வகையைச் சுட்டுக.
23. பின்வரும் சொற்களை பொருள் உணர்ந்து தொடரில் அமைக்க.
கரை – கறை
24. பகுபத உறுப்பிலக்கணம் தருக.
உணர்ந்த
25. கலைச்சொல் தருக. எழுதுக.
அ) Water management ஆ) Classical literature
குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.
சொல்லுக்குள் சொல் தேடுக. பாய்மரக்கப்பல்
26. பிழை நீக்கி எழுதுக.
அ) நல்ல தமிழுக்கு எழுதுவோம் ஆ) பவளவிழிதான் பரிசு உரியவன்
27. இடிகுரல், பெருங்கடல் – இலக்கணக் குறிப்புத் தருக.
28. சரியான வினைமுற்றைக் கொண்டு தொடரை நிறைவு செய்க.
அ) இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் -------- (திகழ்)
ஆ) குழந்தைகள் அனைவரும் சுற்றுலா -------- (செல்)

## பகுதி – III (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2X3=6

29. பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக.
30. முழு உருவச் சிற்பங்கள் – புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

31.உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.

தமிழகத்தில் நடைபெறும் ஏறு தழுவுதலில் காளையை அடக்குபவர்கள் எந்த ஆயுதத்தையும் பயன்படுத்தக்கூடாது. நிகழ்வின் தொடக்கத்திலும் முடிவிலும் காளைகளுக்கு வழிபாடு செய்வர். எவராலும் அடக்க முடியாத காளைகளும் உண்டு. எனவே, காளைகளும் வெற்றி பெற்றதாகக் கருதப்படும். அன்பையும் வீரத்தையும் ஒருசேர வளர்த்தெடுக்கும் இவ்விளையாட்டில் காளையை அரவணைத்து அடக்குபவரே வீரராகப் போற்றப்படுவர் தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழாவாக விளங்கும் ஏறுதழுவுதல் இரண்டாயிரம் ஆண்டுகாலத் தொன்மையுடையது.

வினாக்கள்:

1. தமிழகத்தில் நடைபெறும் ஏறுதழுவுதலில் காளையை அடக்குபவர்கள் எதை பயன்படுத்தக் கூடாது?
2. ஏறுதழுவுதலில் எவை வளர்க்கப்படுகிறது?
3. ஏறுதழுவுதல் எத்தனை ஆண்டுகள் தொன்மையுடையது.

**பிரிவு – 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி.** 2X3=6

**34–வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32.நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

33.சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.

34.அடி பிறழாமல் எழுதுக.

அ) 'அறிவியல் என்னும்' எனத் தொடங்கி 'எல்லாக்கோளிலும் ஏற்றுங்கள்' என முடியும் பாடல்.

(அல்லது)

ஆ) 'பூவாது காய்க்கும்' எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலம் பாடல்

**பிரிவு – 3 (மதிப்பெண்கள்:6)**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்.** 2X3=6

35.தன்வினை, பிறவினை – எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

36.கைபிடி, கைப்பிடி – சொற்களின் பொருள் வேறுபாடுகளையும் அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.

37.தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**பகுதி – IV (மதிப்பெண்கள்:25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 5X5=25

38.அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினை தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.

39.அ) சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்துகொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

(அல்லது)

ஆ) பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற நண்பனைப் பாராட்டி கடிதம் எழுதுக.

40.காட்சியைக் கண்டு கவினுற கருத்தளிக்க.





Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

41. கொடுக்கப்பட்டுள்ள தன்விவரப் படிவத்தினை நிரப்புக.

42.அ) சமூகத்திற்கு நல்விளைவுகளைத் தரும் நீங்கள் செய்யக்கூடிய ஐந்து பணிகளை எழுதுக.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க.

Akbar said, "How many crows are there in this city?"
Without even a moment's thought, Birbal replied "There are fifty thousand five hun dred and eighty nine crows,my lord".
"How can you be so sure?" asked Akbar.
Birbal said, "Make your men count, My lord. If you find more crows it means some have come to visit their relatives here. If you find less number of crows it means some have gone to visit their relatives elsewhere".
Akbar was pleased very much by Birbal's wit.

**குறிப்பு: செவிமாற்றுத் திறனாளருக்கான மாற்று வினா.**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

பல்லவர் காலத்தில் சுதையினாலும் கருங்கற்களினாலும் சிற்பங்கள் அமைக்கப்பட்டன. கோவில் தூண்கள் சிற்பங்களால் அழகு பெற்றன. தூண்களில் யாளி, சிங்கம், தாமரை மலர், நுட்பமான வேலைப்பாடுகள் நிறைந்த, வட்டங்கள் போன்றவை பொறிக்கப்பட்டன. பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்ட கோவில்களின் கட்டடங்கள், காற்று தூண்கள் சுற்றுச் சுவர்கள், நுழைவு வாயில்கள் என அனைத்து இடங்களிலும் சிற்பங்கள் மிளிர்வதைக் காண முடியும்.

**வினாக்கள்:**

1. பல்லவர் காலத்தில் எதனால் சிற்பங்கள் அமைக்கப்பட்டன.
2. யார் ஆட்சிகாலத்தில் சிற்பங்கள் மிளிர்வதைக் காணமுடியும்?
3. கோவில் தூண்கள் எதனால் அழகு பெற்றன.
4. பல்லவர் காலத் தூண்களில் எவை பொறிக்கப்பட்டிருந்தன?
5. உரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு எழுதுக.

## பகுதி – V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** 3X8=24

43.அ) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.

(அல்லது)

ஆ) 'நீரின்று அமையாது உலகு' என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுடன் விவரிக்க.

44.அ) இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

(அல்லது)

ஆ) இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் "செய்தி" கதையின் மூலமாக விளக்குக.

45.குறிப்புகளைக் கொண்டு கற்பனையாக உங்கள் பயண அனுபவங்களை எழுதுக.

அ) முன்னுரை – இனிய பயணம் – கண்ட காட்சிகள் மெய்சிலிர்த்த அனுபவம் – இயற்கை எழில் – முடிவுரை.

(அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு பெண்கல்வி என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

முன்னுரை – கல்வியின் இன்றியமையாமை – பெண்கல்வியின் தேவை – பெண் கல்வியே சமூக முன்னேற்றம் – முடிவுரை.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

கொடுக்கப்பட்டுள்ள தன்விவரப் படிவத்தினை நிரப்புக.

**தன் விவரப் படிவம்**

1. மாணவர் பெயர் : ____________________
2. பெற்றோர் பெயர் : ____________________
3. கல்வித் தகுதி : ____________________
4. பாலினம் : ____________________
5. பள்ளி முகவரி : ____________________

____________________

____________________

____________________

www.Padasalai.Net